
الخصائص النبوية
في الأحاديث المعراجية



வெளியீடு

பல்லாக் லெப்பை குடும்பத்தினர்

காயல்பட்டணம்

faheem

اَلْخَصَائِصُ النَّبَوِيَّة فِى الْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّة

வேந்தர் நபியின் விண்ணுலகப் பயண வரலாறு

தொகுப்பு :

அல்லாமா அஸ்ஸெய்யது முஹம்மது அப்துல் காதிர்
ஆலிம் அல்மல்கரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

வெளியீடு

பல்லாக் குடும்பத்தினர்
காயல்பட்டணம்.

அச்சு அமைப்பு :

ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ், 98415 67213

اَلْخَصَائِصُ النَّبَوِيَّةُ
فِى الْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّةِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

سُبْحَانَ الْعَلِيِّ الْاَعْلٰى، اَلْوَلِيِّ الْاَوْلٰى، اَلَّذِىْ اَسْرٰى
بِعَبْدِهٖ لَيْلًا، مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَى الْمَسْجِدِ
الْاَقْصٰى لِيُرِيَهٗ مِنْ عَجَائِبِ غَرَائِبِ اٰيَاتِهِ الْكُبْرٰى
وَعَرَّجَهٗ اِلٰى اَطْبَاقِ اَفْلَاكٍ عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهٰى،
وَاَدَارَهٗ عَلٰى مَلَكُوْتِ جَبَرُوْتِ عَوَالِمِهِ الْعُلْوِيَّةِ
وَالسُّفْلٰى، وَاَجْلَسَهٗ عَلٰى رَفْرَفِ كُرْسِيِّ ثُمَّ دَنٰى
فَتَدَلّٰى، وَاَوْقَفَهٗ عَلٰى مَنَصَّةِ عَرْشِهٖ فِىْ حَضْرَةِ
قُرْبِيَّةٍ فَكَانَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى، وَاَشْهَدَهٗ
جَمَالَ جَلَالِ كَمَالِ اَحَدِيَّةٍ مَا كَذَبَ الْفُؤَادُ مَا
رَاٰى، وَاَطْلَعَهٗ عَلٰى اَنْوَارِ اَسْرَارِ غَيْبِيَّةٍ فَاَوْحٰى

اِلٰى عَبْدِهٖ مَا اَوْحٰى، وَخَلَعَ عَلَيْهِ تَاجَ كَرَامَةِ
صَمَدِيَّةِ مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغٰى، اَحْمَدُهٗ عَلٰى مَا
اَنْزَلَ وَاَجْزَلَ، وَاَتَمَّ وَاَكْمَلَ، عَلَيْنَا مِنْ وَالِ
مِفْضَالِ الْاٰءِ نَعْمَآئِهٖ مِنْ خَزَائِنِ غَيْبِ فَيْضِ
اَقْدَسِ رَحْمُوْتِهِ السَّابِقِيَّةِ، الَّذِىْ اَعْلٰى مَرَاتِبَ
مَنَاسِبِ رُسُلِهٖ وَاَنْبِيَائِهٖ اِلٰى اَوْجِ مَعَارِجِ مَدَارِجِ
النُّبُوَّةِ الْاِلٰهِيَّةِ، وَرَفَعَ مَرَاكِبَ مَطَالِبِ اَوْلِيَاءِهٖ
اِلٰى ذِرْوَةِ اَعَالِى مَعَالِى الْوِلَايَةِ الرَّبَّانِيَّةِ، وَفَضَّلَ
سَيِّدَنَا مُحَمَّدًا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلٰى جَمِيْعِ
خَلْقِهٖ عَلَى الْاِطْلَاقِ بِالْكُلِّيَّةِ الْاَجْمَعِيَّةِ، حَيْثُ
اخْتَصَّهٗ بِقَابِ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى مِنْ حَضْرَةِ الْقُرْبِيَّةِ
اللَّامَكَانِيَّةِ، وَاَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ
لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةَ عَبْدٍ مُّقِرٍّ بِعَجْزِهٖ وَذِلَّتِهِ
الْاَصْلِيَّةِ، مُعْتَرِفٍ بِتَقْصِيْرِهٖ وَانْقِطَاعِ حِيْلَتِهِ
الْعُذْرِيَّةِ، وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

الْمَصْدُوْقُ بِشَاوُسِ سَعَادَةِ سِيَادَةِ نُبُوَّةِ رِسَالَتِهِ
الْخَاتِمِيَّةِ، الْمَنْصُوْصُ بِجَاوِيْشِ دَوْلَةِ صَوْلَةِ
سَطْوَةِ الْخِلَافَةِ الْعَامَّةِ الْمُطْلَقَةِ السَّرْمَدِيَّةِ،
الْمَوْصُوْفُ بِقُطْبِيَّتِهِ الْكُبْرٰى الْفَرْدَانِيَّةِ الذَّاتِيَّةِ،
الْمَنْصُوْبُ عَلٰى بِسَاطِ سِمَاطِ مَرْكَزِ الْاَفْلَاكِ
الْوُجُوْدِيَّةِ، الْمَحْمُوْدُ فِى الْمَلَكُوْتِ وَالنَّاسُوْتِ
بِمَعَالِىْ مَعَانِىْ سِيْرَتِهِ الْمَرْضِيَّةِ، الْمَشْهُوْدُ فِى
الْجَبَرُوْتِ وَاللَّاهُوْتِ بِصُوْرَتِهِ الْحَقِيْقِيَّةِ الْحَقِّيَّةِ،
الْمَخْصُوْصُ بِمَكَارِمِ مَحَاسِنِ اَوْصَافِ اَلْطَافِ
اَخْلَاقِهِ الْعَظِيْمَةِ السَّنِيَّةِ، الْمَوْهُوْبُ بِجَلَائِلِ
جَزَائِلِ فَضَائِلِ فَوَاضِلِ مَرْتَبَتِهِ الْاَعْلَوِيَّةِ، عَلٰى
وَجْهِ الْاَكْمَلِيَّةِ الْاَجْمَعِيَّةِ، فَكَيْفَ لَا وَالْاَنْبِيَاءُ
ظِلَالُ نُبُوَّتِهٖ، وَالْاَوْلِيَاءُ اٰثَارُ وِلَايَتِهٖ، وَالْمَلَائِكَةُ
اَمْوَاجُ اَبْحُرِ اَخْلَاقِهٖ، وَجَمِيْعُ الْاَرْوَاحِ شُعَاعَاتُ
نُوْرِ اِشْرَاقِهٖ، اٰدَمُ وَمَنْ بَعْدَهٗ نُوَّابُهٗ، وَجَبْرَئِيْلُ

وَمَنْ تَحْتَهُ اَتْبَاعُهُ، فَمَا الْعَجَبُ فِيمَنْ اِذَا كَانَ لَهُ
الْمِعْرَاجَةُ فِى اللَّيْلِ، فِى شَأْنِ "لِى مَعَ اللّٰهِ وَقْتٌ لَا
يَسَعُنِى فِيهِ مَلَكٌ مُقَرَّبٌ وَلَا نَبِىٌّ مُرْسَلٌ"، فَلَا
مَدْحَ وَلَا ثَنَاءَ، وَلَا مَجْدَ وَلَا سُودَدَ، وَلَا شَرَفَ
وَلَا فَخَارَ، وَلَا فَضْلَ وَلَا كَمَالَ، وَلَا حَالَ وَلَا مَقَامَ،
مِنْ مَقَامِ الْعُبُوْدِيَّةِ بَعْدَ الرُّبُوْبِيَّةِ، اِلَّا وَمُحَمَّدٌ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَحَقُّ بِهَا وَاَهْلُهَا بِحَقِيْقَتِهِ
الذَّاتِيَّةِ، وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى خَيْرِ ذَاتِهِ الْمُطَهَّرَةِ
الْمُقَدَّسَةِ الْمُشَرَّفَةِ بِحَضْرَتِهِ الْقُدْسِيَّةِ، وَعَلٰى
اٰلِهِ وَصَحْبِهِ وَسَائِرِ اُمَّتِهِ الْخَيْرِيَّةِ، مَا طَابَ مُدَّاحُ
طَابَ طَابَ، مَحْبُوْبِنَا الْمُسْتَطَابِ، بِذِكْرِ مَعَانِى
مَثَانِى مَنَصَّةِ قِصَّتِهِ الْمِعْرَاجِيَّةِ، وَبِنَشْرِ نِثَارِ
نِظَامِ لَآلِى اَحَادِيْثِ اللَّيْلَةِ الْاِسْرَائِيَّةِ، فَهَا
اَنَا اَشْرَعُ فِى شَرْحِ غُرْفَةٍ مِنْ اَخْبَارِ الْمِعْرَاجِ مِنْ
تَيَّارِ زَخَّارِ دَأْمَائِهِ، اَوْ بَحْثِ رَشْفَةٍ مِنْ فَيَّاضِ

حِيَاضِ اِسْرَائِهِ، فَاَنْشُرُ مِنْ رَيَّاهُ فَوَاحِىَ فَوَائِحِ
الْمِسْكِ وَالْعُطُوْرِ، عَلٰى حَضَرَاتِ الْقُرَّاءِ وَالسُّمُوْعِ
وَالْحُضُوْرِ، فِى نَدْوَتِنَا هٰذِهِ الْمُبَارَكَةِ الشَّذِيَّةِ، ثُمَّ
اَنْسُجُ مِنْ هَاتِيْكَ الْجَوَاهِرِ وَالدُّرَرِ، مَا بَيْنَ النَّظْمِ
وَالنَّثْرِ، بُرْدَةً عَبْقَرِيَّةً، اُحَيِّى بِهَا مُحَيَّا مَمْدُوْحِ الْمُحَلّٰى
بِحُلَلِ الْكَمَالَاتِ الْعَلِيَّةِ، مُتَبَرِّكًا بِفَيْضِ مُقَدَّسِ
حَضْرَةِ الذَّاتِ الْمُصْطَفَوِيَّةِ، مُسْتَمِدًّا بِفَضْلِ
جُوْدِ وُجُوْدِهِ الْمُسْتَفَاضِ مِنْهُ الْبَرَكَةُ وَالنِّعْمَةُ
لِكُلِّ الْبَرِيَّةِ، وَاَسْتَعِيْنُ اللّٰهَ فِى ذٰلِكَ بِمُطَهَّرِ جَنَابِ
الرُّوْحِ الْمُحَمَّدِيَّةِ، وَهُوَ الْاَحَقُّ بِحَقِيْقَةِ الْحَقِيَّةِ
اَنْ يُسْتَجَابَ كُلُّ دَاعٍ لِدُعَائِهِ فِى جَمِيْعِ مُهِمَّاتِهِ
الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ وَالْاُخْرَوِيَّةِ

1. ஹிகாயத்தின் வரலாறு

மஹா மேலான மாட்சிமைக்குரிய வல்ல காரிய கர்த்தாவாகிய ஆண்டவன் அல்லாஹ் சுபுஹானஹு வ தஆலாவை தூய்மையாக்குகிறேன். அவன் தனது அரும்பெரும் அற்புதானந்த அதிவினோத அற்புதங்களை காண்பிக்க வேண்டி தனது சொந்த அடிமையாகிய நம் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சங்கை பொருந்திய பள்ளி கஃபத்துல்லாவிலிருந்து தீர்ச்சையான பள்ளி பைத்துல் முகத்தஸளவிலே இராவழி நடத்தினான்.

இன்னும் சித்ரத்துல் முன்தஹாவெனும் மகாம் வரையில் ஏழுவான்களின் ஒவ்வொரு அடுக்கின் பேரிலும் ஏற்றுவித்தான். ஆலம் உல்வி மேலுலகம் ஆலம் ஸுப்லி கீழுலகமெனும் இருலோகத்தின் தனது தத்துவாதிகார பீடஸ்தலமாகிய ஆலம் மலகூத்தெனும் அமரர் உலகம் ஆலம் ஜபரூத்தெனும் சூட்சம உலகத்தில் பவனி நடத்தினான்.

தன்னளவில் மிக நெருங்கி முடுகினாரெனும் திருவாக்கியத்தின் ஆசனத்தில் பச்சை பொற்கம்பளத்தில் அமர்த்தினான். "காப கவ்ஸைனி அவ் அத்னா'வெனும் சமீப சமூகத்தின் தனது அர்ஷாகிய சிம்மாசன கொலுவினிடத்து நல் வரவேற்றான். தாங்கள் தரிசித்த காட்சியை மனது மறக்கவில்லை என்ற திருவசனமாகிய மகாம் அஹதியத்தெனும் ஏகாந்த பரிபூரண வன்மையின் அழகை அவர்கட்கு ஸ்தோத்திரமருளினான்.

தனது அடிமையளவில் "வஹீ" பரம இரகசியம் அறிவித்ததை எல்லாம் அறிவித்தான் என்னும் திருவுளத்தின் மறைவான சூட்சாதி சூட்சியத்தின் ஒளிகளின் மீது அவர்களை உதயமாக்கி வைத்தான். பார்வைப் பிசகாது மாறாதிருந்ததென்று திரு ஆயத்தின் நிரந்தர கவுரவ கிரீடத்தை அவர்கட்குச் சூட்டினான். நான் அவனைப் புகழ்கிறேன். அவன் தனது முதன்மை பெற்ற திவ்விய கிருபா கடாட்சத்தின் சுனையில், ஒலிக்கும் சூட்சுமப் பொக்கிஷத்தின் இரகசிய, பராசிய நிஃமத் என்னும் வரிசைக் கொடையில் சர்வ

சம்பூரணமான நிரப்பமான மிகுதமான சௌபாக்கியங்களை நமக்காக இறக்கியருளினான். தனது ரசூல்மார்கள் அன்பியாக்கள் அலைஹிமிஸ்ஸலாம் அவர்களின் 'மர்தபா' அந்தஸ்த்துக் களை தெய்வீகத் தன்மையின் "நுபுவ்வத்" தீர்க்க தரிசனத்துவப்பட்ட பதவிகளென்னும் ஏணிப்படிகளின் தீர்ச்சைக்கு உயர்த்தினான். தனது அவ்லியாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் இலட்சியங் களென்னும் வாகனங்களை நாயகத்துவத்தின் சர்வாதிகாரமென்னும் "விலாயத்" மேலாதி மேன்மையின் உச்சஸ்தானத்திற்கேற்றி வைத்தான். இன்னும் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எல்லா படைப்புகளுக்கும் மேலால் தானமற்ற தானமாகிய "காப கவ்ஸைனி" சமீப சமூகமென்னும் நன்னிலங்கொண்டு சொந்தமாக்கிவைத்ததன் பலனாக மொத்தமாக வரிசையாக்கினான்.

இன்னும் நான் வணக்கத்திற்குரித்தாக்கிய நாயன் தனித்த இணையற்ற அல்லாஹ் தஆலாவையன்றி வேறில்லையென ஓர் அடிமையானவன் தன்னியற்கை சுபாவமான இழிவு இயலாமைக் கொண்டு உறுதிக் கூறி, புகழற்ற நிற்கதியினால் தனக்குரிய குறைகளைக் கொண்டு விண்ணப்பித்துரைக்கும் சாட்சியமாக சாட்சி கூறுகிறேன். இன்னும் சாட்சி கூறுகிறேன். நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவனுடைய நல்லடியாரும், திருத்தூதரும், முத்திராங்கமாகிய "நுபுவ்வத் ரிசாலத்" தீர்க்க தரிசனத்துவம் தூதுத்துவம், நன்மாராயம், நாயகத்துவம் முதலிய சௌபாக்கியங் கொண்டு விசுவதிக்கப்பட்டவர்களும் சதாமயமாயடைய வளையத்தக்க "கிலாபத்" பிரதிநிதித்துவமென்னும் தத்துவாட்சியும், தவ்த்திய மாட்சியும் கொண்டு நிர்ணயிக்கப்பட்டவர்களும் ஹக்கு தஆலாவின் தாத்து அதிசூக்குமத்திற்குரிய "பர்தானிய்யா"தனிமயத்தின் பதவிகளில் "குத்பியத்துல் குபுறா" நடு நாயகத்துவமென்னும் மகா சாஸனப் பட்டங்கொண்டு வர்ணிக்கப் பெற்றவர்களும் உள்ளமையெனும் அண்ட கோல சக்கரத்தின் பந்தியின் விரிப்பில் நடுநாயகமாய் இஸ்தாபிக்கப் பெற்றவர்களும் "நாசூத்து மலக்கூத்து" போதீக ஆத்மீக உலகத்தில் தங்கள் திருவருள் பொருத்தத்திற்குரிய உன்னத

திரு நபி வாக்கியங்களாகிய கோவையான, உதிரியான முத்து ரத்தினாதிகளை விரித்துரைப்பதாலும், நமது மணமாக்கப்பட்ட "தாபதாபென்னும்" திருநாமம் தரித்த மஹ்பூப் நாயகத்தை புகழ்ந்தேற்றுபவர்கள், நித்யானந்த பரவச சுகம் பெற்று வாழும் காலமெல்லாம் ஸலவாத்து, ஸலாம் திருக்கருணையும் நல் ஈடேற்றமும் புரிந்தருள்வானாக ! ஆமீன்.

இனி நாம் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிஃராஜ் சரித்திரவிருத்தாந்த சமுத்திர பிரவாகத்திரைகளினோர் கிரங்கை விவரிப்பதில் மிஃராஜ் என்னும் அகழின் சுனையில் ஒலிக்குமோர் துளியை விளக்குவதில் ஆரம்பித்து அதன் சுகந்த நறுமலர் வாடையில் நின்றும் பரிமளம் வீசத்தக்க களப்ப கஸ்தூரி அத்தர் முதலிய கமளம் வாசனை திரவியங்களை இந்த மணமான, பரக்கத்தான மஜ்லிஸில் சமூகமாயிருப்போர், ஓதுவோர், கேட்போர், முதலியோர்களின் சன்னிதியில் பரந்து வாசிக்கச் செய்கிறேன். பின்பு இந்தக் கோவையான, உதிரியான முத்து மாணிக்கங்களால் ஓர் அபூர்வ பிரதான பட்டு, பரிவட்டமுடித்து அதுக் கொண்டு எனது புகழுக்குரிய அம் மகானின் மேலான சம்பூரண, சுயஞ்ஜோதி திருமுக வதனத்திற்கு காணிக்கை வைக்கிறேன். இன்னும் நம் முஸ்தபா நாயகமவர்களின் துப்புரவான தாத்து நுட்பத்தில் கசிந்தொழுகும் பைழு கனிவின் பொலிவை நாடினவனாகவும், அவர்களில் நின்றும் சர்வ சிருஷ்டிகளுக்கும் அருளத்தக்க நிஃமத்து, பரக்கத்தென்னும் சௌபாக்கியத்தின் வரிசையைக் கொண்டு ஆதரவு தேடினவனாகவும் இருக்கிறேன்.

இன்னும் நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிசுத்த ரூஹ் ஆத்மீக சமூகத்தில் இவ்வரியப் பெரிய புண்ணிய, தரும, கைங்கரியத்தில் உதவி தேடினவனாகவும் இருக்கிறேன். ஏனெனில் அவர்களே தங்கள் திவ்விய, சமூகத்தைக் கொண்டு துஆ இறக்கும் எல்லா ஒவ்வொருவனின் இகபரலோக சர்வ அத்தியா வசியங்களுக்குரிய பிரார்த்தனைகளை அங்கீகரிக்கப்படுவதற்கு தக்க உரிமையாளராகவும் காரண புருஷராகவும் இருக்கிறார்கள்.

நன்னடத்தையின் அகமியப் பொருள் கொண்டு புகழப் பெற்றவர்களும் "ஜபரூத் லாகூத்" சூட்சாதி, சூட்சும உலகத்தில் தங்களகமியத்திலே ஹக்குடைய வர்ணணைகளில் புகழப் பெற்றவர்களும், தக்க கண்ணியம் நிலவிய சற்கணாதீத வர்ணணைகளின் அழகிய சங்கைக் கொண்டு சிறப்பிக்கப் பெற்றவர்களும், சர்வ பரிபூரணத் தோரணையில் தங்கள் உயர் பதவியில் தக்க அருமையும், மிகப் பெருமையும், கனவரிசையும், வெகு சிலாக்கியமும் கொண்டு பரிசளிக்கப் பெற்றவர்களுமாகும். ஏனெனில் "அன்பியாக்கள்" தங்கள் நபித்துவத்தின் சாய்கைகளாகவும், "அவ்லியாக்கள்" தங்கள் வலித்துவத்தின் அடையாளங்களாகவும், மலாயிகத்து அமரர்கள் தங்கள் சற்குண சாகரத்தின் திரைகளாகவும் சர்வ "அர்வாஹு" ஆத்மாக்களும் தங்கள் திருவதன சுயஞ்ஜோதியின் பிரபைகளாகவும், ஆதமும் அவர்பின் சந்ததிகளும் தங்கள் பிரதிநிதிகளாகவும், ஜிப்ரீல் தேவர்கோனும், அவருக்கு கீழ்பட்டோரும், தங்கள் அடிச்சுவட்டை பின்பற்றினவர்ளாகவு மிருக்கின்றனர். ஆதலின் யாதொரு முர்ஸலான நபியாகிலும், முகர்ரபான மலக்காகிலும், ஏகத்தாகாத ஓர் சந்தர்ப்பம் அல்லாஹ் தஆலாவினிடத்தில் எனக்குண்டு என்ற தங்கள் திருவுளப் பிரமாணப்படி அவர்களுக்கு ஓரிறவில் ஒரே மிஃராஜ் உண்டாவது ஆச்சரியமாமோ?

ஆகவே ஏதொரு புகழோ, துதியோ, கவுரவமோ, கியாதியோ, நாயகத்துவமோ, சிறப்போ, மாட்சியோ, சம்பூரணமோ, இன்னும் தெய்வீகத்துவத்திற்கு புறம்பான அடிமைத் தன்மையின் பதவிகளில் யாதொரு மகாம் ஹால் ஸ்திர, ஸ்துதியோ, அவற்றிற்கு நமது மஹ்பூப் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் திவ்விய தாத்தின் நுண்ணிய நுட்பத்தினால் சுதந்திர பாதியஸ்தராயிருந்தே அல்லாமல் உண்டாயிருக்கவில்லை.

இன்னும் அல்லாஹ்தஆலா தனது திவ்விய திருச்சமூகத்தளவில் நல்வரவருளைப் பெற்ற அந்நாயகரின் பரிசுத்த சிறப்பான தாத்து நுட்பத்தின் மீதும், அவர்களின் மித்திர சகாக்கள் சமஸ்த சமூகத்தினர் மீதும், தங்கள் மிஃராஜ் சரித்திர பீடிகை புகழ்ச்சியின் கருத்துக்களை எடுத்தோதுவது கொண்டும் அவ்விரவின் ஹதீது

مَوْلَايَ صَلِّ وَسَلِّمْ دَائِمًا اَبَدًا

سُبْحَانَ رَبِّي مَنْ بِالْعَبْدِ اَسْرَاهُ	مِنْ مَسْجِدِ الْحَرَامِ الْمَحْمِيِّ بَطْحَاهُ
لَيْلًا اِلَى الْمَسْجِدِ الْاَقْصَى الْمُقَدَّسِ اِنْ	يُعْصَى بِهِ فَالِى الْاَعْلَى فَاَعْلَاهُ
مِنْ عَالَمِ الْعُلُوِّ مِنْ سَبْعِ الطِّبَاقِ مِنَ الْ	جَنَّاتِ وَالنَّارِ وَالْاَرْوَاحُ تَلْقَاهُ
مِنْ مُنْتَهَى السِّدْرِ مِمَّا لَا انْتِهَاءَ لَهُ	مِنْ مُسْتَوَى الْعَرْشِ فَالرَّحْمٰنُ نَادَاهُ
نَادَى وَدَلَّى اِلَى اَنْ كَانَ قُرْبَتُهُ	مِنْ قَابِ قَوْسَيْنِ قُرْبًا ثُمَّ اَدْنَاهُ
حَتَّى دَنَى فَتَدَلَّى لَا مَكَانَ وَلَا	شَاءَ وَلٰكِنَّهُ مِنْ دُوْنِ مَرْقَاهُ
نَعْتٌ تَثَنَّى حَبِيْبًا لِلْمُحِبِّ وَلَا	مُثْلِثٌ ثُمَّ كَلَّا بَلْ وَحَاشَاهُ
لَقَدْ رَاٰى اٰيَةَ الْكُبْرٰى بِقُدْرَتِهِ	وَكَمْ اَعَاجِيْبَ وَالْاَنْوَارُ تَغْشَاهُ
اَوْكَمْ اَعَاجِيْبَ وَالْاَنْوَارُ شَاهِدَةً	اَوْكَمْ خَفِيْ عُلُوْمٌ قَدْ تَلَقَّاهُ
مِنْ عَالِمِ الْغَيْبِ اِذْ اَوْحَى اِلَيْهِ بِمَا	اَوْحَى الْمُهَيْمِنُ فِي السِّرِّ اَوْ ضَرَّاهُ
وَعَايَنَ اللّٰهَ حَقًّا اَرَى يَقْظَتِهِ	بِعَيْنِ رَأْسٍ وَعَيْنِ الْقَلْبِ تَرْعَاهُ
وَرَحَّبَ اللّٰهُ لُقْيَاهُ وَبَشَّرَهُ	مُلْطِفًا جِسْمَهُ مِنْ حَيْثُ رَقَّاهُ
فَبَعْدَ اَنْ قَرَّ عَيْنًا عَادَ مُنْتَحِلًا	بِخَيْرِ دِيْنٍ مِنَ الْقُرْاٰنِ اَمْلَاهُ
وَبِالشَّفَاعَةِ فَضْلًا اَنْ تُخَلِّصَنَا	مِنَ الْجَحِيْمِ اِلَى الْفِرْدَوْسِ مَأْوَاهُ
يَا رَبِّ صَلِّ عَلَيْهِ دَائِمًا وَّعَلَى	اٰلٍ وَّصَحْبٍ وَمَنْ اَوْلَا فَاَوْلَاهُ

2. பைத்தின் உரை

1) எனது ஆண்டவன் அல்லாஹ் தஆலாவை தூய்மைப்படுத்துகிறேன் அவன் தனது சொந்த அடிமையாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை திரு மக்கா மாநகரில் பாதுகாக்கப்பட்ட கஃபத்துல்லா வெனும் சங்கையான பள்ளியிலிருந்து இராவழி நடத்தினான்.

2) பரிசுத்த பைத்துல் முகத்தஸெனும் பள்ளியிடத்திலும் அதற்கு மேலும் அதன் மேலும் உயர்த்தினான்.

3) அதாவது மேல் லோகமாகிய ஆன்மாக்கள் சந்திக்கத் தக்க ஏழுடுக்கு வானங்கள், சுவர்க்க நரகம்.

4) இன்னும் தீச்சையற்ற ஸ்தலமாகிய "சித்ரத்துல் முன்தஹா" வென்னும் கற்பக விருட்சம், தெய்வீக ஆசிரமமாகிய அர்ஷின் திவ்விய சமஸ்தானங்களுமாம். ஆகவே ரஹ்மானாகிய ஆண்டவன் அவர்களைக் கூப்பிட்டான்.

5) காபகவ்ஸைனி அவ்அத்னா வென்னும் சமீப சாயுட்சமய சமீபத்தில் நல்வரவேற்றான்.

6) நாயகம் தங்கள் உயர்பதவியின் அடுத்த படியில் ஏறுகிற எவருக்கும் யாதொரு ஜோடியும், தானமும் ஈந்திரா வண்ணம் அதனை நெருங்கிச் சென்றார்கள்.

7) மெய்தான். அவ்விடத்தில் மூன்றாவதொருவருமின்றி முஹிப்பாகிய ஆண்டவனுக்கு ஹபீபாகிய தாங்களே இரண்டாவதாக இருந்தார்கள்.

8) திட்டமாக ஆண்டவனின் குத்ரத்தினால் அரும்பெரும் திருஷ்டாந்தங்களை தரிசித்ததும், எம்மாத்திரமோ அற்புத அதிசய ஒலிகள் அவர்களை பொதிந்துக் கொண்டன.

9) இன்னும் எத்தனையோ அதிசய ஆச்சரியமான ஒளிகளையும் அந்தரங்க அறிவுகளையும் தரிசித்து அறிந்தார்கள்.

10) சூட்சாதி சூட்சய அறிவுடைய ஆண்டவன் இரகசிய

பராசியத்தில் வஹி அறிவித்த பரம இரகசியங்களை தெரிந்துக் கொண்டார்கள்.

11) தங்கள் அகக்கண் பேணுதலுடன் தலைக்கண்களால் விழிப்பிலேயே அல்லாஹ் தஆலாவை நிச்சயமாகக் கண்டார்கள்.

12) அல்லாஹ் தஆலா நாயகமவர்களை மேலே உயர்த்துகையில் தங்கள் ஸ்தூல திரேகத்தை மிருதுவாக்கி, அவர்களின் சந்திப்பை நல்வரவேற்று வந்தனமளித்தான்.

13) பின்பு அல்லாஹ்தஆலாவை கண்குளிரக் கண்டபின் திருக்குர்ஆன் ஷரீபின் பூர்வ பீடிகையாகிய நன்மார்க்க நியம, நிஷ்டையாகிய ஒழுக்க, வணக்கங்களைப் பெற்றவர்களாகவும்

14) பிரதானமாக நம்மை கொடிய நரகத்தைவிட்டும், கடைத்தேற பிர்தௌஸென்னும் சுவனப் பதியில் சேர்த்து வைக்கும் பொருட்டு மனமார்ந்த மன்றாட்டம் கொண்டும் மீண்டு வந்தார்கள்.

16) எனது ஆண்டவனே ! அந்நாயகத்தின் மீதும், அவர்களின் சமூக சகாக்கள் மீதும், அடுத்தடுத்த தரவாரியான உரித்தாளிகள் மீதும் நீடூழிகாலம் ஸலவாத்து, ஸலாம் கருணையும், ஈடேற்றமும் பாலித்தருள்வாயாக !

ثُمَّ لِنَبْدَأَ الْمَقَالَ، بِسْمِ اللّٰهِ الْمَلِكِ الْمُتَعَالِ، وَهُوَ
خَيْرُ قَائِلٍ، وَقَالَ عَزَّ مِنْ قَائِلٍ، سُبْحَانَ الَّذِي أَسْرٰى
بِعَبْدِهٖ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ، قَالَ اَنَسٌ رَضِيَ اللّٰهُ
عَنْهُ هُوَ الْكَعْبَةُ، وَقِيْلَ مِنْ بَيْتِ فَاخِتَةَ الْمَشْهُوْرَةِ
بِاُمِّ هَانِئٍ بِنْتِ اَبِيْ طَالِبٍ، اِلَى الْمَسْجِدِ الْاَقْصٰى يَعْنِيْ
بَيْتَ الْمُقَدَّسِ، لِكَوْنِهٖ مُنَزَّهًا مِنَ الْاَصْنَامِ وَيُتَطَهَّرُ

فِيْهِ مِنَ الْاٰثَامِ، ثُمَّ اخْتَلَفَ الْعُلَمَاءُ فِيْ مِعْرَاجِهٖ وَ
اِسْرَآئِهٖ بِالرُّوْحِ اَوْ مَعَ الْجَسَدِ، وَالْاَصَحُّ اَنَّهُمَا
بِالرُّوْحِ وَالْجَسَدِ، مَعًا يَقَظَةً فِي الْبَارِحَةِ، اِلٰى حَيْثُ
شَاءَ اللّٰهُ مِنْ مَقَامِ الْمُكَافَحَةِ، وَالصَّوَابُ اَنَّهٗ كَانَ
الْمِعْرَاجُ بِمَكَّةَ لَيْلَةَ السَّابِعَةِ وَالْعِشْرِيْنَ، مِنْ
رَجَبَ بَعْدَ النُّبُوَّةِ بِعَشْرِ سِنِيْنَ، وَكَانَ لَيْلَةَ
الْاِثْنَيْنِ اَوْ لَيْلَةَ السَّبْتِ، وَذٰلِكَ اَنَّ اللّٰهَ تَعَالٰى لَمَّا
اَرَادَ اَنْ يُّسْرِيَ بِمُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِلٰى
حَضْرَةِ قُدْسِهٖ، وَيُقَرِّبَهٗ لِمَحَلِّ كَرَامَتِهٖ وَاُنْسِهٖ،
قَالَ يَا جِبْرِيْلُ قُمْ وَتَدَرَّعْ بِالْاَجْنِحَةِ الطَّاؤُسِيَّةِ،
وَرَصِّعْ اَجْنِحَتَكَ بِالْجَوَاهِرِ السَّنِيَّةِ، وَلَا تَبْرُزْ اِلَّا
بِسَبْعِ مِائَةِ اَلْفِ جَنَاحٍ، وَسَبْعِ مِائَةِ اَلْفِ وِشَاحٍ، وَخُذْ
مَعَكَ مِيْكَائِيْلَ، وَاِسْرَافِيْلَ وَعِزْرَائِيْلَ، وَمَعَ كُلٍّ
مِّنْكُمْ سَبْعُوْنَ اَلْفَ مَلَكٍ بِالتَّسْبِيْحِ وَالتَّهْلِيْلِ، ثُمَّ
اذْهَبْ اِلَى الْجَنَّةِ وَخُذْ اَحْسَنَ الْبُرَاقِ، مِنْ اَرْبَعِيْنَ
اَلْفِ بُرَاقٍ، مَكْتُوْبٍ فِيْ جَبْهَتِهٖ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ

رَسُوْلُ اللهِ، ثُمَّ انْزِلْ مَعَهُمْ اِلٰى دَارِ الدُّنْيَا بِلَا تَوَانِىْ
وَادْخُلْ بِمَكَّةَ فِىْ بَيْتِ اُمِّ هَانِىْ، وَفِيْهِ يَتِيْمُ اَبِىْ
طَالِبٍ فَاِذَا وَصَلْتَ اِلَيْهِ فَاحْتَرِمْهُ بِالْاِكْرَامِ، وَالْزَمْ
خِدْمَتَهٗ عَلَى الدَّوَامِ، وَتَادَّبْ تَاَدُّبَ الْخُدَّامِ لَدَيْهِ،
وَاَكْثِرْ مِنَ الصَّلٰوةِ وَالسَّلَامِ عَلَيْهِ، وَقُلْ يَا اَيُّهَا
الْمُزَّمِّلُ يَا اَيُّهَا الْمُدَّثِّرُ رَبُّكَ يُقْرِئُكَ السَّلَامَ،
وَيَدْعُوْكَ لِيَحْبُوْكَ خَيْرَ الْاِنْعَامِ، فَذَهَبَ جِبْرِيْلُ
بِاَمْرِ رَبِّهِ الْجَلِيْلِ، وَرَاٰى بُرَاقًا بَاكِيًا، قَدْ تَرَكَ
الْاَكْلَ وَالشُّرْبَ ذَاوِيًا، فَسَاَلَهٗ عَنِ الْمَقْصَدِ،
فَقَالَ شَوْقًا اِلَى اسْمِ مُحَمَّدٍ، فَاَخَذَهٗ وَهُوَ فَوْقَ الْحِمَارِ
دُوْنَ الْبَغْلِ، عَلٰى صُوْرَةِ وَجْهِ الْاٰدَمِيِّ بِقَوَائِمِ الْاِبِلِ،
وَذَنَبُهٗ كَالْبَقَرَةِ، وَجَبِيْنُهٗ كَالزُّهَرَةِ، وَلَوْنُهٗ كَالطَّاؤُسِ
وَبَدَنُهٗ مِنَ الْيَاقُوْتِ النَّفِيْسِ، وَرَاْسُهٗ مِنَ الْمِسْكِ
الْاَذْفَرِ، وَعُنُقُهٗ مِنَ الْعَنْبَرِ، وَخُطْوَتُهٗ مُنْتَهَى الْبَصَرِ
مَشْدُوْدٌ بِسِلْسِلَةِ التِّبْرِ وَالْجَوْهَرِ اَللّٰهُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ

3. ஹிகாயத்தின் வரலாறு

பின்னர் நாம் அதி உன்னத மேன்மையான உத்தம இராஜனாகிய அல்லாஹ் தஆலாவின் திருநாமத்தை முன்னிட்டு இந்த மிஃராஜின் வரலாற்றை துவக்குவோம். அவனே அதை அங்கீகரிப்பதில் மிக சிலாக்கியமானவன். இன்னும் சிறப்பான திருவசனத்திற்குரிய ஆண்டவன். அல்லாஹ்தஆலா திருவுளமானான். சங்கையான பள்ளியில் நின்றும் தனது சொந்த அடியார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இராவழி நடத்திய நாயன் தூயவன்.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அருட் செய்கிறார்கள். சங்கையான பள்ளி என்ற தன் கருத்தாவது கஃபத்துல்லா திருமக்காவின் பரிசுத்த சேத்திரமாகும். இன்னுமொரு சொல்லின்படி அபூ தாலிபின் புதல்வி பாஹிதா வென்று பிரசித்திப் பெற்ற உம்முஹானி ரழியல்லாஹு அன்ஹாவின் வீட்டிலிருந்து தூரமான பள்ளி வரையில் அதாவது பரிசுத்தப்பட்டணம் என்று பொருட்பட்ட பைத்துல் முகத்தஸாகும். அது விக்கிரகங்களை விட்டு துப்புரவாக்கப்பட்டிருப்பதாலும் பாவங்களை விட்டும் சித்தமாக்கப் பட்டிருப்பதாலுமே அங்ஙனம் பெயர் பெற்றது.

பின்னர் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிஃராஜ் என்னும் வினோத யாத்திரையானது ரூமா தங்களின் ஆத்மாவைக் கொண்டு மாத்திரமா? அல்லது ஜஸது சரீரத்தோடுமா? வென்ற விஷயத்தில் "உலமாவு" கல்விமான்கள் அபிப்பிராயத்தில் பலவாறு விகர்ப்பம் கூறியிருக்கின்றார்கள். எனினும் மிகப் பலமான சொல்லின்படி ஆத்மாவும், சரீரமும் உடந்தையாகவே அல்லாஹ் தஆலா நாடிய தானமாகிய சமூக சம்பாஷணையின் ஸ்தலம் வரையில் நள்ளிரவில் விழிப்பிலேயே நுவுவ்வத் நபித்துவத்திற்கு பத்து வருடங்களுக்குப் பின் ரஜபு மாதம் இருபத்தேழு திங்கள் அல்லது சனி இரவிலாயிருந்தது.

வரலாறாவது பூர்வாங்கமாக, அல்லாஹ் தஆலா தனது ஹபீபாகிய நமது நாயகம் ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தனது பரிசுத்த சமூகத்தளவில்

இராவழி நடத்திவிக்கவும், தனது மகத்துவ மருவுதலென்னும் ஐக்கிய ஸ்தலத்தளவில் முடுகச் செய்யவும் நாடிய போது ஜிப்ரிலென்னும் அமரர் கோனை அழைத்து ஜிப்ரிலே ! நீரெழுந்து உமது கலப,மரகத மயில்தோகை வடிவுடைய அங்கவஸ்திரங்களை அணிந்துக் கொள்ளும் விசித்திர இறக்கைகளை அழகிய நவரத்தினதிகளால் அலங்கரித்துக் கொள்ளும். எழுபதனாயிரம் சிறகுகளும் எழுபதனாயிரம் போர்வைகளுமின்றி வெளிக்கிட வேண்டாம். உம்முடன் மீக்காயீல், இஸ்ராபீல், இஜ்ராயீல் அலைஹிமிஸ் ஸலாமென்னும் தேவத் தூதர்களையும் கூட்டிக் கொள்ளும். உங்களில் ஒவ்வொருவருடனும் எழுபதினாயிரம் மலாயிக்கத் அமரர்களையும் தஸ்பீஹ், தஹ்லீல் திருமந்திரத்தை முழக்கினவர்களாய் சேர்த்துக் கொள்ளும்.

இன்னும் சுவனலோகத்தில் சென்று நாற்பதினாயிரம் புராக்கெனும் தெய்வ வாகனங்களிலிருந்து நெற்றியில் "லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்ற இஸ்லாமிய மூலவாக்கியத்தை பொறிக்கப்பட்ட அழகிய இலட்சணமுடைய ஓர் புராக்கை தெரிந்தெடுத்துக் கொள்ளும். அந்த அமரர்களுடன் தாமதமின்றி பூலோகத்திறங்கி உம்மு ஹானி ரழியல்லாஹு அன்ஹாவுடைய வீட்டிற்குள் செல்லும். அவ்விடத்தில் அபூதாலிபின் எதீம் அநாதையான அருமைக் குமாரரிருக்கிறார். நீர் அவரிடம் சென்றால் அவருக்கு சங்கை மரியாதைச் செய்யும் அவருடைய பணிவிடையை எப்பொழுதும் பற்றிக் கொள்ளும். அவரிடத்தில் ஊழியக் காரரின் ஒழுங்காய் சேவைப்புரியும். அவர் பேரில் கருணை ஈடேற்றத்தை மிகுதப்படுத்தும். அவருக்கு சொல்லும் போர்வை அங்கவஸ்திரம் அணிந்தவரே ! உமது நாயன் உமக்கு ஸலாமுரைத்தான். உமக்கு நல்ல சன்மானம் அருள வேண்டி உம்மை அழைக்கிறானென கூறி அனுப்பினான்.

ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தமது வலுப்பமுடைய ஆண்டவனின் விடைப் பெற்று அங்குச் செல்லவே ஓர் அழகிய புராக்கானது ஊண், குடிப்பை விடுத்து, மெலிந்து வதங்கிய திரேகத்தோடு அழுது, சலித்திருக்கக் கண்டு அதன் நாட்டத்தைப் பற்றி வினவினார். அது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு

நாமத்தை ஆசை வைத்திருக்கிறேன் எனச் சொல்லவே அதைப் பிடித்தார்கள். அது கழுதையிற் பெரிதாகவும் கோவேறு கழுதையிற் சிறியதாகவும், மனித முகத்தின் வடிவமாகவும், ஒட்டகையின் கால்களுடையதாகவும் இருந்தது. அதில் வாலானது மாட்டின் வால் போலும் நெற்றி இளம் பிறைப் போன்றும், நிறம் மயிலுக்கொப்பாயும் உடல் உயர்ந்த மாணிக்கத்தாலும், சிரசு சுகந்த கஸ்தூரியினாலும், கழுத்து அம்பரினாலுமிருந்தன. அதன் ஒவ்வோர் காலடியின் தூரம் பார்வை எட்டும் தொலையாகவும், இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பொற் சங்கிலியினால் கட்டப் பட்டிருந்தது. ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து ஸலாம் சொல்வாயாக.

لَا اِلٰـهَ اِلَّا اللّٰهُ   لَا اِلٰـهَ اِلَّا اللّٰهُ
لَا اِلٰـهَ اِلَّا اللّٰهُ   مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه
اَلنَّبِيُّ صَلُّوْا عَلَيْهِ   وَالرَّسُوْلُ صَلُّوْا عَلَيْهِ
اَيُّهَا الْعُشَّاقُ فِيْهِ   دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِيُّ هٰذَا الْكَرِيْمُ   ذَاتُهٗ فَيْضٌ عَمِيْمٌ
خُلُقُهٗ خُلُقٌ عَظِيْمٌ   دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِي السَّامِي الْمَقَامْ   خَيْرُ مَنْ صَلّٰى وَصَامْ
جُوْدُهٗ فِي الْكَوْنِ عَامْ   دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِيُّ الْهَادِي الْبَشِيْر   خَيْرُ دَاعِيْنَا النَّذِيْر
نِعْمَ جَارُ الْمُسْتَجِيْر   دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِيُّ خَيْرُ الْبَشَرْ   مَنْ لَهُ انْشَقَّ الْقَمَرْ
وَاَتٰى لَـهُ الشَّجَـرْ   دَائِمًا صَلُّوْا عَلَيْهِ

اَلْغَمَامُ قَدْ اَظَلْ — وَالزَّرَلْ قَدْ هَمَلْ
مِنْ يَمِيْنِهٖ هَطَلْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلْوُحُوْشُ عَظَّمَتْ — قُدْرَهٗ وَكَلَّمَتْ
وَعَلَيْهِ سَلَّمَتْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
قَدْ سَرٰى لَيْلًا ظَلِيْلْ — نَحْوَ مَوْلَاهُ الْجَلِيْلْ
وَالْمُنَادِيْ جِبْرِيْلْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
وَرَقٰى فَوْقَ الْبُرَاقْ — وَالْاَمِيْنُ مَعًا وَّسَاقْ
وَعَلَا السَّبْعَ الطِّبَاقْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
خَيْرَةُ الرُّسُلِ الْكِرَامْ — زُبْدَةُ الْعُرْبِ الْعِظَامْ
صَفْوَةُ الْحَيِّ الْجِسَامْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
قِبْلَةٌ لِّلْمُؤْمِنِيْنْ — رَحْمَةٌ لِّلْعَالَمِيْنْ
نِعْمَةُ الدُّنْيَا وَدِيْنْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
يَا خَطِيْبَ الْاَنْبِيَا — يَا نَقِيْبَ الْاَصْفِيَا
يَا حَبِيْبَ الْاَتْقِيَا — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَنْتَ سِرُّ الْعَارِفِيْنْ — اَنْتَ رَمْزُ الْعَاشِقِيْنْ

اَنْتَ مَعْنَى الْحَامِدِيْنْ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
يَا شَفِيْعَ الْمُذْنِبِيْنْ — عَبْدُكَ الْعَاصِي الْمُهِيْنْ
فَاقْبَلُوْهُ كُلَّ حِيْنِ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
وَلَصَلَّى اللّٰهُ عَلَيْكَ — تُحْفَةً بَيْنَ يَدَيْكَ
وَالرِّضٰى عَمَّنْ لَدَيْكَ — دَائِمًا صَلُّوْا عَلَيْهِ

4. பைத்தின் உரை

1) இந்த நபிநாயகர் மீது ஸலவாத்துச் சொல்வீர்களாக ! இந்த ரசூல் நாயகர் மீது ஸலவாத்துச் சொல்வீர்களாக ! அவர்களிடத்தில் ஆசை பூண்டவர்களே ! அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

2) இந்த நபியானவர் சங்கை வாய்ந்தவர். இவரது திரு தீர்த்தானது கருணை ஒலிக்கும் சுனையாகும். இவரது குணமோ சாந்த சற்குணம். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலாவத்துச் சொல்வீர்களாக !

3) இந்த நபியானவர் உயர்பதவியினர். தொழுபவர் நோன்பு பிடிப்பவரில் விசேஷமானவர். இவரது கொடை அகில உலகிலும் ஏக மயமானது. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

4) இந்த நபியானவர் சன்மார்க்க வழிக்காட்டி. தெய்வ அருள்வாக்கி, நம்மை அல்லாஹ்விடத்தில் அழைப்போர், துஷ்டரை அச்சம் பூட்டுகிறவர். சார்ந்தோருக்கு தக்க சகாயமளிப்பவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

5) இந்த நபி மனுஷரில் நல்லவர். அவருக்காக பிறை இரு பிளவாயது. அவரிடம் விருட்ஷம் ஊர்ந்து வந்தது. நித்தியமும் அவர்கள் பேரில் ஸலவாத்து சொல்வீர்களாக !

6) மேகம் அவருக்கு நிழலிட்டது. அவரின் வலக்கரத்திலிருந்து

மதுரமான ஜலம் பொங்கி ஒலித்தது. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்தும் சொல்வீர்களாக !

7) விலங்கினங்கள் அவர் தகுதியை மதித்து அவரோடு பேசி ஸலாமுரைத்தது. அவர்கள் போல் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக !

8) காரிரவில் வல்ல நாயனிடம் ஜிப்ரீல் அழைத்தேகச் சென்றார்கள். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

9) ஜிப்ரீல் இழுத்துப் போகும்படி புராக்கின் மீதேறி, ஏழுவான்களுக்கு மேல் உயர்ந்தார்கள். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

10) சங்கை வாய்ந்த ரசூல்மார்களில் ஹைரானவர். மகிமைக்குரிய அரபிகளில் தெரியப்பட்டவர். வலுப்பமான கிளையினரில் தெளிந்தவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

11) முஃமினானவர்கட்கு முன்னிலையானவர்கள். ஆலத்தாருக்கு ரஹ்மத்தானவர். தீன், துன்யாவின் நிஃமத்தானவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

12) அன்பியாக்களின் போதகரே ! அஸ்பியாக்களின் நாயகரே ! தக்வா உடையவரின் நண்பரே. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

13) தாங்களே ஆரிஃபீன்களின் அகமியம், தாங்களே ஆஷிக்கீன்களின் அந்தரங்கம். தாங்களே புகழ்பாடுவோரின் இலட்சியம். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

14) பாவிகளை மன்றாடும் இரட்சகரே ! இதோ கேவலம் தங்களின் பாவியான அடியேன். தாங்கள் அவனை சதாவும் அங்கீகரித் தருள்வீர்களாக. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக !

15) அல்லாஹ் தஆலா தங்கள் பேரில் ஸலவாத்தை சமூக காணிக்கை வைப்பானாக ! தங்களைச் சார்ந்தோர்களைத் தொட்டும் அவனது திருவுளப் பொருத்தம் உண்டாவதாக ! அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

فَلَمَّا نَزَلَ بِهٖ جِبْرِيْلُ اِلَى الدُّنْيَا قَرَعَ حَلْقَةَ الْبَابِ،
وَاقِفًا لَدَى الْاَعْتَابِ، وَقَالَ قُمْ يَا يَتِيْمَ اَبِيْ طَالِبٍ،
قَدْ هُيِّئَتْ لَكَ الْمَطَالِبُ، قُمْ يَا مُحَمَّدُ اللَّيْلَةَ لَيْلَتُكَ
وَالدَّوْلَةُ دَوْلَتُكَ، قُمْ يَا حَبِيْبِيْ فَاِنَّ الْبَابَ مَفْتُوْحٌ
وَالْعَطَا عَلَيْكَ مَمْنُوْحٌ، قُمْ يَا سَيِّدِيْ وَتَاَهَّبْ، وَ
عَلٰى ظَهْرِ الْبُرَاقِ فَارْكَبْ، فَسَمِعَهٗ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ، فَقَالَ يَا جِبْرِيْلُ جِئْتَنِيْ بِاٰيَةِ رَحْمَةٍ اَمْ بِاٰيَةِ
نِقْمَةٍ، فَقَالَ اِنَّ اللّٰهَ يُقْرِئُكَ السَّلَامَ وَيَدْعُوْكَ
لِحَضْرَةِ الْعِزِّ وَالْاِكْرَامِ، لِمَا بَيْنَكَ وَبَيْنَهٗ مِنَ الْاَسْرَارِ
الْعِظَامِ، فَقَالَ يَا اَخِيْ جِبْرِيْلُ الْكَرِيْمُ يَدْعُوْنِيْ فَمَاذَا
يَصْنَعُ بِيْ، فَقَالَ لِيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا تَقَدَّمَ مِنْ
ذَنْبِكَ وَمَا تَاَخَّرَ، قَالَ هٰذَا لِيْ، فَمَا لِاُمَّتِيْ فَقَالَ
وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ، اَيِ الشَّفَاعَةَ الْكُبْرٰى
خُصُوْصًا فِيْ اُمَّتِكَ فِي الْقِيٰمَةِ فَتَرْضٰى، قَالَ مَهْلًا
حَتّٰى اَتَوَضَّأَ، فَاَتٰى جِبْرِيْلُ وَمِيْكَائِيْلُ بِمَاءِ زَمْزَمَ

فِي طَسْتٍ اَوْبِمَاءِ السَّلْسَبِيْلِ، مَعَ حُلَّةٍ مِّنْ سُنْدُسٍ
اَخْضَرَ وَعِمَامَةٍ مِّنْ نُوْرٍ اَسْفَرَ، مَكْتُوْبٌ عَلَيْهَا
اَرْبَعَةُ اَسْطُرٍ، اَلْاَوَّلُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ، اَلثَّانِيْ
مُحَمَّدٌ نَبِيُّ اللّٰهِ، اَلثَّالِثُ مُحَمَّدٌ حَبِيْبُ اللّٰهِ، اَلرَّابِعُ
مُحَمَّدٌ خَلِيْلُ اللّٰهِ، فَلَمَّا اَتَمَّ طُهْرَهُ، شَقَّا صَدْرَهُ،
وَاَخْرَجَا قَلْبَهُ، وَغَسَلَا لُبَّهُ، وَاَزَاحَا عَنْهُ حَظَّ الشَّيْطَانِ
وَاَفْرَغَا فِيْ صَدْرِهِ الْحِكْمَةَ وَالْاِيْمَانَ، وَمَلَاٰ قَلْبَهُ
عِلْمًا وَّيَقِيْنًا فَغَطَاهُ، وَخَتَمَا بَيْنَ كَتِفَيْهِ بِخَاتَمِ
النُّبُوَّةِ مَا اَتَمَّ وَاَجْلَاهُ،

شعر

خَتَمَتْهُ يُمْنُ الْاَمِيْنِ وَقَدْ اَوْ	دَعَ مَا لَمْ تُدَعْ لَهُ الْاَنْبَاءُ
صَانَ اَسْرَارَهُ الْخِتَامُ فَلَا الْفَـ	ـضُّ مُلِمٌّ بِهِ وَلَا الْاِفْضَاءُ

وَيَالَهُ مِنْ نُوْرٍ يُحَارُ دُوْنَهُ النَّاظِرُ اِلَى اَشِعَّةِ
اَرْدَاهُ، وَكَانَ ذٰلِكَ فِي الشَّقَّةِ الرَّابِعَةِ الْخَاصَّةِ
لِهٰذَا النَّبِيِّ الْحَاشِرِ الْكَرِيْمِ مُحَيَّاهُ، ثُمَّ قَدَّمَ

جِبْرِيْلُ الْبُرَاقَ اِلَيْهِ، فَتَاَهَّبَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ لِلرُّكُوْبِ عَلَيْهِ، فَاَدْبَرَ الْبُرَاقُ نَافِرًا، فَقَرَعَهُ
جِبْرِيْلُ بِسَوْطِ التَّاْدِيْبِ بَاسِرًا، وَقَالَ اَمَا تَسْتَحِيْ
مِنْهُ، فَوَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ مَا عَلَا ظَهْرَكَ اَفْضَلُ
مِنْهُ، فَقَالَ الْبُرَاقُ هٰذَا النَّبِيُّ الْمَسْعُوْدُ، هٰذَا
صَاحِبُ اللِّوَاءِ الْمَعْقُوْدِ، وَالْحَوْضِ الْمَوْرُوْدِ، وَ
الْمَقَامِ الْمَحْمُوْدِ، قَالَ نَعَمْ، فَعِنْدَ ذٰلِكَ خَضَعَ لَهُ
وَقَالَ ارْكَبْ يَا نَبِيَّ الرَّحْمَةِ، يَا شَفِيْعَ الْاُمَّةِ، وَلَا تَنْسَ
نَصِيْبِيْ مِنْ شَفَاعَتِكَ يَوْمَ الْقِيٰمَةِ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

5. ஹிகாயத்தின் வரலாறு

பின்பு ஜிப்ரீலானவர் புராக்கைக் கொண்டு உலகத்திலிறங்கி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டு வாயலிற்றியப் பட்டவராய் கதவை தட்டிச் சொன்னதாவது அபூதாலிபின் அநாதையாகிய அருமை மகனே ! எழுந்திரும். உமக்குள்ள நாட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. முஹம்மதே ! எழுங்கள் இன்றிரவானது உமது இரவும், இந்த வாழ்வானது உமது வாழ்வுமாகும். எழுந்தருளும். எனது நண்பரே ! நிஜமாக வாயல் திறக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை உமக்கு அருளப்பட்டு இருக்கிறது. எழும் எனது நாயகரே ! ஆயத்தமாகும். இதோ புராக்கின் முதுகிலேறுமென்றார்.

அதுக்கேட்டு நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஜிப்ரீலே ! நீர் என்னிடம் ரஹ்மத் கருணையுடைய ஆயத்து திருஷ்டாந்தத்தைக் கொண்டோ, அல்லது வேதனையின் ஆயத்து திருஷ்டாந்தத்தை கொண்டோ வந்தீரெனக் கேட்டார்கள். அதற்கு ஜிப்ரீல் திட்டமாக அல்லாஹ்தஆலா உமக்கு ஸலாம் சொன்னான் அவனுக்கும் உமக்குமிடையில் வலுப்பமான இரகசியங்களிருப் பதற்காக அவனது சிறந்த சங்கையான சன்னிதானத்திற்கு உம்மை அழைத்துவரச் சொன்னான் என்றார்.

அப்பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனது சகோதரரே ! மாட்சிமைக்குரிய ஆண்டவன் என்னை அழைக்கிறான் என்னைக் கொண்டு என்னச் செய்வான் என்றார்கள். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ் தஆலா உங்கள் முந்தியோர் பிந்தியோர் பாவங்களைப் பொறுப்பதற்காக வென்றார்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இது எனக்காக ஆனால் எனது உம்மத் சமூகத்திற்கென்னவிருக்கிறதென்றார்கள். ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் உமது நாயன் கியாமத் உலக முடிவு நாளில் உமக்கு "ஷபாஅத்துல் குப்ரா" வென்னும் பெரிய மன்றாட்டத்தை தருவான். முக்கியமாக உமது சமூகத்தினரில் விசேஷ மன்றாட்டத்தை நீர் பொருந்தும் படி தந்தருள்வா வென்றார்கள். நாயகமவர்கள் ஒளுவு நியம சுத்தி செய்யும் வரை பொருத்திருமென்றார்கள். உடனே ஜிப்ரீல், மீக்காயிலென்னும் தெய்வத்துவ தலைவர்கள் ஜம்ஜம் கிணற்று தண்ணீர் அல்லது ஸல்ஸபீலென்னும் சுவர்க்கத்தின் ஆற்று தண்ணீரை அழகிய ஓர் கெண்டி கொண்டு அதனுடன் பசிய வருண சுன்துஸீ பட்டும் வெண்மையான ஒளியினால் ஓர் தலைப்பாகையும் கொண்டு வந்தனர்.

அதன் பேரில் நான்கு வரிகளிருந்தன. முதல் வரியில் முஹம்மதுர் ரசூலுல்லாஹி அல்லாஹ்வின் திருத்தூதர். இரண்டாம் வரியில் முஹம்மதுன் நபியுல்லாஹ் அல்லாஹ்வின் தீர்க்கதரிசி மூன்றாம் வரியில் முஹம்மதுன் ஹபீபுல்லாஹ் அல்லாஹ்வின் நண்பர். நான்காம் வரியில் முஹம்மதுன் கலீலுல்லாஹ். அல்லாஹ்வின் தோழர் என்று எழுதப்பட்டிருந்தன. நாயகமவர்கள் ஒளுவை நிரப்பமாக்கி முடித்தவுடன் அவர்களிருவரும் நாயகமவர்களின் நெஞ்சைப் பிளந்து கல்பு மனதை வெளியிலெடுத்து அகத்தைச் சுத்தி

செய்து அதில் நின்றும் ஷைத்தானின் அம்சத்தைக் களைந்து ஹிருதயத்தில் ஹிக்மத் பூராயத்தையும் ஈமான் நம்பிக்கையையும் சொறிந்து மனதில் அறிவையும் யகீன் விசுவாசத்தையும் நிரப்பிவித்து அதைத் தைத்து இரு புயங்களுக்குமிடையில் "நுபுவ்வத்" நபித்துவத்தின் முத்திரையாகிய இலாஞ்சனை தரிபித்தார்கள். அதன் பரிபூரண அலங்காரங்களாகிய வர்ணிக்க எவரால் முடியாத அற்புதமாயும் அதன் ஒளியின் பிறப்பையை பார்ப்போர் பிரமிக்க தக்க ஜோதியுமாயிருந்தது.

நபி நாயகமவர்கட்கு ஜிப்ரீலின் வலக்கரத்தால் முத்திரை தரிப்பிக்கப்பட்டு நபிமார்களின் அறிவிற்குமெட்டாத அகமியங்களதிற் புதையலாக்கப் பட்டன. அந்த முத்திரையானது தங்கள் இரகசியப் பொருள்களை பாதுகாத்துக் கொண்டமையால் அதைப் பொலித்து. பிரசித்தப்படுதலறிதலாயிட்டது. இன்னும் அந்த முத்திரையானது இந்த சங்கையான கடைசி நபிக்கு சொந்தமான நான்காம் பிளப்பில் தரிப்பிக்கப்பட்டது. பின்பு ஜிப்ரீல் புராக்கை முற்படுத்தவே நபி நாயகம் அதன் மீது ஏற பிரயத்தமானப் போது புராக் விரண்டு பின்னடைவதைக் கண்ட ஜிப்ரீல் தமது கைக் கசையினால் அதை வற்புறுத்தி, புத்திவருத்தி, புராக்கே ! நீ இவரில் நின்றும் வெட்கிக்கவில்லையா? எவனுடைய தத்துவத்தில் என்னுடைய உயிரிருக்கிறதோ அந்த நாயன் பேரில் சத்தியமாக ! இவரினும் பெரிய மகான் உன் முதுகின் மீதேறுவதில்லை என்றார்கள்.

உடனே புராக்கானது இவரே மோட்சத்துக்குரிய நபியா? இவரே புகழ்பெற்ற லிவாவுல்ஹம்து கொடியுடையவரா? இவரே ஹவ்ழுல் கவ்தரென்னும் சுவன லோகத்தின் ஆற்றின் அதிபரா? இவரே மகாமுல் மஹ்மூதென்னும் துத்தியஸ்தானத்தில் மன்றாடும் தாயகரா? வென வினவியதற்கு ஜிப்ரீல் ஆமாம். இவர் தானென்றவுடன் புராக்கானது அடி பணிந்து, தாட்சி செய்து கிருபையுடைய நபியே ! தங்கள் உம்மத்து சமூகத்தினரை மன்றாடி கடைத்தேறும் இரட்சகரே ! என் முதுகிலேறு வீர்களாக. கியாமத் மறுமைநாளில் மன்றாட்டத்தின் போது என்னுடைய பங்கை மறவாதிருப்பீர்களாகவென வேண்டிக் கொண்டது. ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத் சொல்வாயாக.

يَارَبَّنَا يَارَبَّنَا يَارَبَّنَا

١ صَلُّوْا عَلٰى هٰذَا النَّبِيِّ وَاٰلِهِ

هٰذَا الرَّسُوْلُ حَوَى الْعُلَا بِكَمَالِهِ

هٰذَا الَّذِىْ حُمِدَتْ جَمِيْعُ خِصَالِهِ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٢ هٰذَا الْحَبِيْبُ الْمُصْطَفَى الْمُكَرَّمُ

هٰذَا الْخَلِيْلُ الْمُجْتَبَى الْمُعَظَّمُ

فَرْضٌ عَلَيْنَا حُبُّهُ وَمُحَتَّمُ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٣ هٰذَا الصَّفِيُّ الْهَاشِمِيُّ الْمُطَّلِبِيْ

هٰذَا النَّبِيُّ الْحَرَمِيُّ الْعَرَبِيْ

هٰذَا الزَّكِيُّ الْاَبْطَحِيُّ الْيَثْرِبِيْ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٤ هٰذَا الشَّرِيْفُ السَّيِّدُ الْمُفَضَّلُ

هٰذَا الظَّرِيْفُ الطَّيِّبُ الْمُبَجَّلُ

هٰذَا هُوَ الْمُدَّثِّرُ الْمُزَّمِّلُ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٥ هٰذَا الْمُنَزَّهُ عَنْ شَوَائِبِ شَيْنِهِ

فِيْ ذَاتِهِ وَصِفَاتِهِ اَوْحُسْنِهِ

فَالْحُسْنُ مِنْهُ مُقَسَّمٌ فِيْ كَوْنِهِ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٦ هٰذَا الَّذِىْ خُلِقَتْ لَهُ الْاَفْلَاكُ وَالْ

اَمْلَاكُ وَالْاَشْيَا الْعَوَالِيْ وَالسُّفُلْ

فَالْكُلُّ اَجْزَا نُوْرِهِ بَلْ وَهُوَ كُلْ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٧ هٰذَا الَّذِيْ طَابَ الْوُجُوْدُ بِجُوْدِهِ

وَتَبَاهَتِ الْبَطْحَا بِشَمْسِ وُجُوْدِهِ

وَتَفَاخَرَتْ طَيْبَةُ بِسَعْدِ سُعُوْدِهِ

فَبِحُبِّهِ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ

٨ هٰذَا بِهِ الْبَيْتُ الْعَتِيْقُ مُحَرَّمُ

وَبِهِ الْمُصَلّٰى وَالْمَقَامُ مُعَظَّمُ

وَبِظِلِّهِ يَحْمِي الْحَطِيْمُ وَزَمْزَمُ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
٩ هٰذَا مُحَمَّدُنِ الْوَحِيْدُ الْاَوْحَدُ
وَلَيْسَ يُدْرِكُ كُنْهَهُ اَوْيُقْصَدُ
كَلَّا وَلَا مِثْلٌ لَهُ فَسَيُوْجَدُ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١٠ قَدْ اَنْزَلَ الْمَوْلَى الْقُرْاٰنَ بِخُلْقِهِ
فَالْخُلْقُ اَحْرَى اَنْ يَّحِقَّ بِخَلْقِهِ
فَكَفٰى بِهِ فِيْ حَقِّهِ اَوْصِدْقِهِ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١١ كَمْ اٰيَةٍ فِيْ سُوْرَةِ الْاِسْرَا جَلَتْ
وَالنَّجْمِ اَسْرَارٌ لِّمَسْرَاهُ عَلَتْ
فَاِذَا تَلَوْتَ تَجِدْ مَعَانِيْهَا انْجَلَتْ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١٢ اَوْكَمْ لَهُ فِي الْفَتْحِ وَالنَّصْرِ الْعَجِيْبْ

نَصْرٌ مِّنَ اللهِ مَعَ الْفَتْحِ الْقَرِيْبْ
فَاقْرَأْهُمَا وَاشْكُرْ لِمَوْلَاكَ الْمُجِيْبْ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١٣ مَنْ مِّثْلُ اَحْمَدَ فِيْ جَلَالَةِ شَانِهِ
اَوْفِيْ عُلُوِّ مَقَامِهِ وَمَكَانِهِ
وَاللهُ اَثْنَاهُ بِنَصِّ قُرَانِهِ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١٤ وَلَخَصَّهُ وَحْيًا بِحَضْرَةِ قُدْسِهِ
وَالرَّأْيِ فِي الدُّنْيَا بِعَيْنَيْ رَأْسِهِ
وَالْقُرْبِ وَالزُّلْفٰى بِمَقْعَدِ اُنْسِهِ
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ
١٥ وَعَلَيْكَ صَلَّى اللهُ يَاغَوْثِيْ كَمَا
حَيَّاكَ اِذْ حَيَّيْتَهُ فَوْقَ السَّمَا
وَكَذَا الرِّضٰى وَالْعَفْوُ عَنَّا دَائِمَا
فَبِحُبِّهِ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ

௬. பைத்தின் உரை

1) இந்த நபி மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள். இந்த ரசூலானவர் சர்வ மேன்மைகளையும் சம்பூரணமாய் பொதிந்தவர். இவர் குணாதிசயங்களில் புகழ் பெற்றவர்.

(2) இவரை உகந்து அவர் மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள். இவரே தெளிவாக்கப் பெற்ற சங்கைக்குரிய நண்பர். இவரே தெரியப்பட்ட மகிமைக்குரிய தோழர். இவரை உவப்பது நம்மீது விதிக்கப்பட்ட வேதக் கடமையாகும். இவரை உகந்து.

(3) இவரே ஹாஷிமி, முத்தலிபீ வமிசத்தில் தெளிந்தவர். இவரே கஃபத்துல்லாஹ்விலும் அரபிகளிலும் இரட்சகர். இவரே திருமக்கா, மதீனாவில் பரிசுத்தமானவர். இவரை உகந்து

(4) இவரை சிறப்பு வாய்ந்த வரிசைக்குரிய நாயகர் இவரே நன்மதிப்பிற்குரிய மணமான வள்ளலானவர். இவரே திருக்குர்ஆனில் முத்தத்திர், முஜ்ஜமிலென்னும் திருநாமம் தரிக்கப் பெற்றவர் இவரை உகந்து

5) இவரே நுட்பத்திலோ, வர்ணிப்பிலோ, அழகிலோ, மாசற்ற பரிசுத்தவான் அழகானது. இவரிலிருந்தே அகில உலகத்திலும் பங்கு வழங்கப்பட்டது. இவரை உகந்து

(6) இவருக்காகவே ஏழுவான்களும், அமரர்களும் மேல், கீழ் லோகங்களும் சிருஷ்டிக்கப்பட்டன. அவையெல்லாம் இவரது ஒளியின் அம்சங்களும், இவரே முழு ஒளியுமானவர். இவரை உகந்து

(7) இவரது கொடையினாலே உலகம் மணம் பெற்றது. இவரது உள்ளமை சூரியனாலே திருமக்க மாநகரம் பெருமை பேசிற்று. இவரது நற்சகுண நட்சத்திரத்தினால் மதீனமாநகரம் வீர் பெற்றது. இவரை உகந்து

(8) இவர் பொருட்டால், கஃபத்துல்லா சங்கைப் பெற்றது. முஸல்லாவும், மகாமும் வண்ணமையுற்றன. இவரது நிழலிலே ஹதீமும், ஜம்ஜமும் பாதுகாக்கப் பெற்றவை. இவரை உகந்து

(9) இவரே தனி ஒருமைக்குரிய முஹம்மதாயவர். இவரது நுட்பத்தை எவராலும் பெறவோ, கருதவோ முடியாது. நிஜம் தான்

இவருக்கொப்பானவர் உண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை. இவரை உகந்து

(10) ஹக்கு தஆலா இவரது குண விசேஷத்திற்கிணங்கவே திருக்குர்ஆனை இறக்கினான். இவரது குணமோ, தமது சிருஷ்டி வடிவத்தினாலே மெய்பிக்க தக்கதாலும், இவரது உண்மையிலும் சத்தியத்திலும், தமது உருவத்தோற்றம் தானே முற்றிலும் போதிய அத்தாட்சியாகும். இவரை உகந்து

(11) "இஸ்ராவெனும் மிஃராஜின் சூரத்திலும், வன்னஜ்மி சூரத்திலும், எம்மாத்திரமோ மிஃராஜின் உயரிய நுட்பங்களும், அரிய பெரிய திருஷ்டாந்தங்களும் வெளியாயிருக்கின்றன. அவைகளை நீ ஓதிப்பார்ப்பின் அதன் உட்பொருட்களை இஸ்பஷ்டமாய் காண்பாய் இவரை உகந்து.

(12) இன்னும் பத்ஹ் சூரத்திலும், நஸ்ரு சூரத்திலும், எம்மாத்திரமோ அற்புதங்களாகிய உதவிகளும், வெற்றிமாராயங் களும் அல்லாஹ்தஆலா வினால் அவர்கட்குண்டாயிருக்கின்றன. இவ்விரண்டையும் ஓதி உனது ஆண்டவனுக்கு நன்றி செலுத்திக் கொள். இவரை உகந்து.

(13) அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை போல் மகத்துவ வன்மையிலும் உயரிய நிலையிலும், சிறந்த உதவியிலும் வேறொருவருமில்லை. அல்லாஹ் தஆலா தனது திவ்விய குர்ஆன் ஷரீபில் அவர்களை போற்றி புகழ்ந்திருக்கிறான். இவரை உகந்து.

(14) திட்டமாக ஆண்டவன் ஹக்கு சுப்ஹானஹு வதஆலா தனது பரிசுத்த சன்னிதானத்தில் வஹீ எனும் பரம இரகசியம் கொண்டு சம்பாஷனைப் புரிவதாலும், துன்யாவிலே தங்கள் முகத்தின் இரு விழிகளால் திருக்காட்சிப் புரிவதாலும், இன்னும் தனது ஐக்கியம், மருவுதல், முடுகுதல் எனும் சமீப சமூக நல்வரவேற்பதுக் கொண்டும் சிறப்பாக்கிவித்தான். இவரை உகந்து.

(15) எனது இரட்சகரே ! அல்லாஹ் தஆலாவுக்கு வானத்தில் தாங்கள் காணிக்கை வைத்த போது அவனுங்களுக்கு ஸலாம் கொண்டு காணிக்கை வைத்ததுப் போல் உங்கள் மீது ஸலவாத்து சொல்வானாக ! அவ்வாறே அவனது திருவுளப் பொருத்தமும், பாவமன்னிப்பும் எங்களுக்கு சதாக்காலமும் உண்டாவதாக ! இவரை உகந்து அவர் மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள்.

فَلَمَّا رَكِبَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى الْبُرَاقِ، تَشَبَّثَ
جِبْرِيْلُ بِرِكَابِهِ، وَاَخَذَ مِيكَائِيْلُ بِزِمَامِهِ، وَاِسْرَافِيْلُ
يُسَوِّي اَطْرَافَ ثِيَابِهِ، وَعَلَا بِهِ الْبُرَاقُ، وَطَارَ عَلَى
جِبَالِ مَكَّةَ بِالْاِشْتِيَاقِ، فَقَالَ جِبْرِيْلُ يَا مُحَمَّدُ، اِنْزِلْ
وَصَلِّ رَكْعَتَيْنِ فَصَلَّى، فَقَالَ هٰذِهِ طَيْبَةُ فَسَتُهَاجِرُ
اِلَيْهَا اِنْ شَاءَ اللهُ تَعَالَى، ثُمَّ سَارَ فَقَالَ صَلِّ هُنَا
تَحِيَّةً لِلّٰهِ وَتَعْظِيمًا، هٰذَا طُوْرُ سِيْنَا، حَيْثُ كَلَّمَ
اللهُ مُوْسَى تَكْلِيمًا، ثُمَّ سَارَ فَقَالَ صَلِّ بِهٰذَا الْمَقَامِ،
هٰذَا بَيْتُ اللَّحْمِ، حَيْثُ وُلِدَ عِيْسَى وَدَارُ يَحْيَى
عَلَيْهِمَا السَّلَامُ، فَاِذْ ذَاكَ سَمِعَ نِدَاءً عَنْ يُمْنَاهُ،
وَنِدَاءً عَنْ يُسْرَاهُ، ثُمَّ اسْتَقْبَلَتْهُ امْرَاَةٌ بِكُلِّ
زِيْنَةٍ اِلَيْهِ، فَلَمْ يَعْرُجْ عَلَيْهِ فَقَالَ جِبْرِيْلُ الْاَوَّلُ
دَاعِي الْيَهُوْدِ، لَوْ اَجَبْتَهُ لَتَهَوَّدَتْ اُمَّتُكَ، وَالثَّانِي
دَاعِي النَّصَارَى، لَوْ اَجَبْتَهُ لَتَنَصَّرَتْ اُمَّتُكَ وَالْمَرْاَةُ
هِيَ الدُّنْيَا، لَوْ اَجَبْتَهَا لَاخْتَارَتْ اُمَّتُكَ الدُّنْيَا، ثُمَّ

رَاَى شَابًّا اَحْسَنَ فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّهُ وَقَبَّلَهُ بَيْنَ
عَيْنَيْهِ، فَقَالَ جِبْرِيْلُ اِبْشِرْ هٰذَا الدِّيْنُ فَاِنَّ اُمَّتَكَ
يَعِيْشُوْنَ مُسْلِمِيْنَ وَيُمِيْتُوْنَ مُؤْمِنِيْنَ وَيَدْخُلُوْنَ
الْجَنَّةَ اٰمِنِيْنَ، ثُمَّ اُتِيَ بِثَلٰثَةِ اَقْدَاحٍ مِنْ مَاءٍ وَ
خَمْرٍ وَلَبَنٍ، فَاخْتَارَ مِنْهُنَّ اللَّبَنَ، فَقَالَ قَدْ
اَصَبْتَ الْفِطْرَةَ وَالسُّنَنَ، لَوْ شَرِبْتَ الْمَاءَ لَغَرِقَتْ
اُمَّتُكَ، اَوِ الْخَمْرَ سَفِهَتْ اُمَّتُكَ، فَاِنَّهَا سَتُحَرَّمُ
عَلَى اُمَّتِكَ، فَشَرِبَ بَعْضَ اللَّبَنِ، فَقَالَ لَوْ شَرِبْتَ
الْكُلَّ لَمَا كَانَ رَجُلٌ مِنْ اُمَّتِكَ فِي النَّارِ دَخَلَ فَقَالَ رُدَّهُ عَلَيَّ، فَقَالَ
هَيْهَاتَ جَرَى الْقَلَمُ، فَلَا رَادَّ لِمَا حَكَمَ، ثُمَّ رَاَى
قَوْمًا يَزْرَعُوْنَ فِي يَوْمٍ وَيَحْصُدُوْنَ، فَقِيْلَ هٰؤُلَاءِ
الْمُجَاهِدُوْنَ، وَمَرَّ بِقَوْمٍ تُرْضَخُ رُءُوْسُهُمْ
بِالْحِجَارَاتِ، فَقِيْلَ هٰؤُلَاءِ الَّذِيْنَ تَتَثَاقَلَتْ
رُءُوْسُهُمْ عَنِ الصَّلَوَاتِ، وَمَرَّ بِقَوْمٍ عَلَى اَدْبَارِهِمْ
وَاَقْبَالِهِمْ رِقَاعٌ يَسْرَحُوْنَ اِلَى الزَّقُّوْمِ كَالْبَهِيْمَاتِ

فَهُؤُلَآءِ الَّذِيْنَ لَا يُؤَدُّوْنَ الزَّكٰوةَ وَلَا الصَّدَقَاتِ
وَمَرَّ بِقَوْمٍ مِنَ الزُّنَاةِ بَيْنَ اَيْدِيْهِمْ مِنَ اللَّحْمِ
طَيِّبٌ وَخَبِيْثٌ، يَتْرُكُوْنَ الطَّيِّبَ وَيَأْكُلُوْنَ الْخَبِيْثَ،
وَمَرَّ عَلٰى زَحْمَةٍ عَظِيْمَةٍ بِالْفَضَاءِ، ذَبَحُوْا بَقَرَةً
فَقَسَّمُوْهَا اَرْبَعَةَ اَجْزَاءٍ، فَالْيَهُوْدُ اَخَذُوْا
قُرُوْنَهَا وَاَظْلَافَهَا، وَالنَّصَارٰى عُرُوْقَهَا وَاَعْصَابَهَا
وَالْمَجُوْسُ رَوْثَهَا وَدِمَائَهَا، وَالْمُسْلِمُوْنَ لَحْمَهَا وَ
اَلْبَانَهَا وَمَرَّ عَلٰى قَوْمٍ تُقْرَضُ شِفَاهُهُمْ وَاَلْسِنَتُهُمْ
بِمَقَارِيْضَ مِنْ حَدِيْدٍ، فَهُمُ الْخُطَبَاءُ لَا يَعْمَلُوْنَ
بِقَوْلِهِمِ السَّدِيْدِ، ثُمَّ رَاٰى امْرَأَةً مُعَلَّقَةً بِثَدْيِهَا
وَالنَّارُ تُوْقَدُ مِنْ تَحْتِهَا، وَهِيَ تَأْكُلُ مِنْ لَحْمِ جَسَدِهَا
فَهِيَ الَّتِيْ تَتَزَيَّنُ لِغَيْرِ زَوْجِهَا، وَمَشٰى عَلٰى وَادٍ
فَوَجَدَ صَوْتًا حَسَنًا وَرِيْحًا طَيِّبًا نَسَمُهَا، فَهِيَ رَائِحَةُ
الْجَنَّةِ وَنَغَمُهَا، تَقُوْلُ رَبِّ ائْتِنِيْ بِمَا وَعَدْتَّنِيْ،
قَدْ كَثُرَ غُرَفِيْ وَحُلَلِيْ، وَجَوَاهِرِيْ، وَصِفَاشَرَابِيْ،

وَطَعَامِيْ، وَخَمْرِيْ، وَعَسَلِيْ، وَلَبَنِيْ، وَفَوَاكِهِيْ، فَقِيْلَ
لَكِ الْمُسْلِمِيْنَ وَالْمُؤْمِنِيْنَ، وَمَنْ لَا يُشْرِكُ بِاللّٰهِ
مِنَ الْعِبَادِ الصَّالِحِيْنَ، ثُمَّ سَمِعَ عَلٰى وَادٍ صَيْحَةً
مُنْكَرَةً، مَعَ رَائِحَةٍ مُسْتَقْذَرَةٍ، فَهِيَ جَهَنَّمُ تَقُوْلُ
رَبِّ اُتْنِيْ بِمَا وَعَدْتَّنِيْ، قَدْ كَثُرَ سَلَاسِلِيْ، وَاَغْلَالِيْ
وَحَيَّاتِيْ، وَعَقَارِبِيْ، وَاشْتَدَّ نَارِيْ، وَلَهَبِيْ، وَحَرِّيْ
وَبَلَائِيْ، وَمَصَائِبِيْ، فَقِيْلَ لَكِ كُلُّ كَافِرٍ وَّكَافِرَةٍ
مِّنَ الْمُشْرِكِيْنَ وَاَهْلِ الْكِتَابِ، وَمَنْ لَّا يُؤْمِنُ
بِيَوْمِ الْحِسَابِ، ثُمَّ وَجَدَ قَوْمًا يَخْمِشُوْنَ بِاَظْفَارٍ
مِّنْ حَدِيْدٍ وُجُوْهَهُمْ وَصُدُوْرَهُمْ، فَهُمُ الْمُغْتَابُوْنَ
يُمَزِّقُوْنَ اَعْرَاضَ النَّاسِ وَيَهْتِكُوْنَ سُتُوْرَهُمْ ثُمَّ
رَاٰى الدَّجَّالَ عَلٰى فِتْنَتِهٖ وَاِغْوَائِهٖ، اَعَاذَنَا اللّٰهُ مِنْ
شَرِّهٖ وَبَلَائِهٖ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

7. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் புராக்கின் மீது சவாரியானார்கள், ஜிப்ரீல் வாகன காலணியின் மீது தரிபட்டார். மீக்காயில் அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார். இஸ்ராபீல் அதன் அங்கவஸ்திரத்தின் முந்தானைகளை செவ்வைப் படுத்துகிறவராயிருந்தார். புராக்கானது நாயகமவர்களை சுமந்துக் கொண்டு ஆகாயமார்க்கமாய் உயர்ந்து அதிவேகமாய் கன ஆசையுடன் மக்கமா நகரின் மலைகளுக்கு மேலால் பறந்துச் சென்றது. ஜிப்ரீல் முஹம்மதே ! இவ்விடத்திலிறங்கி இரண்டு ரக்அத் தொழும். இதுதான் மதீனா முனவ்வராவெனும் பட்டணமாகும் இதனளவில்தான் அல்லாஹ் தஆலா நாடினால் நீர் ஹிஜ்ரத் திரு யாத்திரை செல்வீரென்று சொல்லவே நாயகம் அவர்கள் தொழுதுக் கொண்டார்கள்.

பின்பு சிறு தூரம் சென்றதும் ஜிப்ரீல் முஹம்மதே ! இவ்விடத்தில் அல்லாஹ் தஆலாவை மகிமைப்படுத்த வேண்டி இரண்டு ரக்அத் தொழும். இதுதான் அல்லாஹ்தஆலா நபி மூஸா அலைஹிஸ்ஸலாமோடு திருவசனம் புரிந்த தலமாகிய தூர்ஸீன் மலையென்றார்.

பின்னும் கொஞ்சம் சென்றதும் இவ்விடத்திலும் தொழும் இதுதான் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமை பிரசவிக்கப்பட்ட பைத்துல் லஹ்மென்ற பட்டணமாகும். நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாமுடைய வீடும், இதுதானென்றார். அச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு வலப்புறத்தாலொரு விழிக்கும் சப்தமும், இடப்புறத்தாலொரு சப்தமும் கேட்டார்கள். இன்னுமொரு சௌந்தரியவதியும் எதிர்பட்டாள். நாயகம் அவ்விடத்தில் தரிபடாது சென்று விட்டார்கள். ஜிப்ரீல் சொன்னார். முந்திய சப்தம் யஹூதியுடையது அதற்கு நீர் விடையளித்தால் உம்முடைய சமூகத்தினர் யூதர்களாயிடுவார்கள். பிந்திய சப்தம் நஸ்ரானி உடையது. அதற்கு நீர் விடையளித்தால் உம்முடைய சமூகத்தினர் கிறிஸ்தவர்களாயிடு வார்கள். அந்தப் பெண்ணானவள் துன்யாவெனும் உலகமாயிருக்கும். அதற்கு நீர் முகங்கொடுத்தால் உமது சமூகத்தினர் பூவுலக மாயையில் சிக்கிக் கொள்வாரென்றார்கள்.

